# ஊடக அறிவித்தல்

தொழில் திணைக்களம்

கொவிட்- 19 வைரஸ் தொற்றுப் பரவலினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் பயணக்கட்டுப்பாடுகள் காரணமாக தொழில் திணைக்களத்திற்குரிய தொழில் அலுவலர்கள் தற்பொழுது பொதுமக்களுக்கு சமீபமாக உள்ளார்கள். எனினும் நீங்கள் தொழில் திணைக்களத்தின் அலுவலக வலையத்தளத்தில் ( http://www.labourdept.gov.lk ) "எங்களுடன் தொடர்பு கொள்ளவும்" என்பதன் கீழ் பொது மக்களுக்கு தொலைநிலை தொடர்பாடல் ஊடகங்கள் ( மின்னஞ்சல், வட்ஸ் அப், வைபர்) மூலம் ஊழியரின் வேலைத்தளம் அமைந்துள்ள பிரதேசத்தில் உள்ள தொழில் அலுவலகத்திற்கு தொழில் சட்டங்களுடன் தொடர்பான எந்த முறைப்பாடு அல்லது விசாரணையை எழுத்து மூலம் அனுப்புவதற்கு வசதி செய்யபட்டுள்ளது என்பதனை தெரிவித்துகொள்ள விரும்புகின்றோம்.

மேலும், .தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் மற்றும் பிரதேச அலுவலகங்களின் நிறைவேற்றுத்தர அலுவலர்களின் கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் "அழையுங்கள் எங்களை" என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன, அதேபோல் தொழில் திணைக்களத்தின் அலுவலக முகநூல் கணக்கு (https://www.facebook.com/labourdeptsl) மற்றும் ருவிற்றர் கணக்கு (https://twitter.com/labourdepts) என்பவற்றிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன, இதன் பிரகாரம், தொழில் திணைக்களத்துடன் தொடர்புடைய எத்தகைய பிரச்சனைகள் தொடர்பாகவும் தொலைபேசி ஊடாக அனுப்புவதற்கான சந்தர்ப்பம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதனை மேலும் தெரிவித்துக் கொள்கின்றோம் அத்துடன் அத்தகைய பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுபெறுவதற்குத் தேவையான அவசிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கௌரவ தொழில் அமைச்சரின் தலைமையின் கீழ் கொவிட்-19 முத்தரப்பு பணிக்குழுக்கூட்டம் 2021.06.02 ஆம் திகதி நடைபெற்றது, அக்கூட்டத்தில் சுதந்திர வர்த்தக வலயங்களில் ஊழியர்களின் வரவு தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என இலங்கை முதலீட்டுச்சபையானது தெரிவித்தது.

மேலும், இக்கூட்டத்தில் தனியார்துறை சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக நிவாரணம் வழங்குவதனை எதிர் காலத்தில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப 2021 திசம்பர் 31 ஆந் திகதி வரை நீடிப்பதற்குக் கலந்துரையாடப்பட்டது. அதே போல் நிவாரணமானது ஒவ்வொரு தொழிற்சாலை / நிறுவனங்கள் வேண்டுகோள் மேற்கொள்ளும் போது தொழில் ஆணையாளர் நாயகத்தின் அனுமதியின் பேரில் அந்த நிவாரணத்திற்கு அனுமதி வழங்கப்படும். எனவே, தொழிற்சாலை / நிறுவனங்கள் அத்தகைய வேண்டுகோள்களை தொழில் திணைக்களத்திற்கு அனுப்புமாறு அவர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.

தொழில் ஆணையாளர் நாயகம்

தொழில் திணைக்களம்